## DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No.24/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 5 | நாள் | : | 23.07.2025 |
| பெயர் | : | மகேஷ் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 23rd day of July 2025.

எதிரி ஆஜர்

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் கேளைய்யாபிள்ளையூரில் வசித்து வருகிறேன். ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். முருகன் என்பவரைத் தெரியும். இறந்துபோன நரசிம்மன் என்பவரைத் தெரியும். அவர் எங்கள் ஊரில் பலசரக்கு கடை நடத்தி வந்தார் அதில் டீக்கடையும் நடத்தி வந்தார். 26.08.2018 ம் தேதி அவர் இறந்துபோனார். அவர் இறந்துபோனது சம்பந்தமாக மறுநாள் ஊரில் பேசிக் கொண்டார்கள். 26.08.2018 அன்று இரவு சுமார் 11.30 மணியிலிருந்து 12 மணிக்குள்ளாக நானும், முருகனும் முருகனை கடையத்தில் அவரை இறக்கிவிடுவதற்காக ஆலங்குளத்திலிருந்து புறப்பட்டுச் சென்றேன். நான்

செல்லும் வழியில் நரசிம்மன் கடையில் சிகரெட் வாங்குவதற்காக நிறுத்தினேன். அங்கு இருசக்கர வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்து அங்கு மூன்று நபர்கள் இருந்தார்கள். அது கருப்பு நிற பல்சர் பைக் TN-05-AV4151 என்ற பதிவெண் கொண்ட வாகனமாகும். நான் கடையில் நிறுத்திவிட்டு நரசிம்மனை பார்த்தபோது தூங்கச் சென்றிருப்பார் என்று நினைத்து எதிரிகளிடம் கேட்டேன். அவர்கள் நரசிம்மன் தூங்கிவிட்டார் என்று சொன்னார்கள் அதனால் அங்கிருந்து சென்றுவிட்டேன். ஆஜர் எதிரிகள்தான் அன்று நான் இரவில் பார்த்த மூன்று நபர்கள் ஆவார்கள். மறுநாள் ரகுநாத் என்பவர் கடை பக்கம் அழுதுகொண்டிருந்தார் நான் என்னவென்று கேட்டபோது நரசிம்மனை யாரோ கொன்று போட்டுவிட்டார்கள் என்று கூறினார். நான் முதல் நாள் இரவு இருசக்கர வாகனம் நிற்கப்பட்டிருந்ததையும் மூன்று நபர்கள் இருந்ததையும் ரகுநாத்திடம் சொன்னேன். என்னை போலீசார் அழைக்கும்போது வரும்படி சொன்னார் மூன்று நாட்கள் கழித்து போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் பார்த்தால் அடையாளம் கூற முடியுமா என்று கேட்டார்கள் அடையாளம் காட்ட முடியும் என்று சொன்னேன். இருசக்கர வாகனத்தின் பதிவு எண் பற்றியும் சொன்னேன். மீண்டும் 14.12.2018 அன்று அடையாள அணிவகுப்பிற்கான அறிவிப்பு கொடுத்தார்கள் அதன்படி 18.12.2018 அன்று பாளையங்கோட்டை மத்திய சிறைச்சாலைக்கு சென்று அடையாள அணிவகுப்பில் கலந்து கொண்டு எதிரிகளை அடையாளம் காட்டினேன். என்னுடன் முருகன் என்பவரும் அடையாள அணிவகுப்பில்

கலந்து கொண்டார் முருகனுக்கு தனியாகவும் எனக்கு தனியாகவும் அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டது. நீதிபதியிடம் அடையாளம் காட்டிய போது அவர் என்னிடம் விசாரித்து கையெழுத்து வாங்கிக்கொண்டார். அடையாள அணிவகுப்பு முடிந்த பிறகு கொடுக்கப்பட்ட வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் அது அ.சா.ஆ-2 ஆகும். இது சம்பந்தமாக போலீசார் என்னை இரண்டு முறை விசாரித்தார்கள்.

## குறுக்குவிசாரணை இல்லை

எதிரி வழக்கறிஞர் ஆஜர். அவருக்கு போதிய வாய்ப்பு அளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்பு அளிக்கப்பட்டும் வழக்கறிஞர் இன்று மூத்த வழக்கறிஞர் இல்லை என்பதால் குறுக்குவிசாரணை செய்யாமல் அதற்கான வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளவில்லை.

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.07.23 17:54:04 +0530